செய்தி வெளியீடு எண்.669 17.10.2007

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு இந்துசமய அறநிலையத் துறையின் உயர்நிலைக்குழுக் கூட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (17.10.2007) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசுவாமி அடிகளார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள், தொழிலதிபர் திரு.கருமுத்துக் கண்ணன், தொழிலதிபர் திரு.எஸ்.வி.பாலசுப்பிரமணியம் மற்றும் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய ஆதீனங்களின் பிரதிநிதிகளும், திருவரங்கம் ஆண்டவன் சுவாமிகளின் பிரதிநிதி ஆகியோரும், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அலுவர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான காலியாக உள்ள நிலங்களையும், மனைகளையும் திருக்கோயில்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டும் வகையில் பயன்படுத்துவது குறித்தும், கோயில் நிலங்கள் மற்றும் மனைகள் தொடர்பான வழக்குகளை விரைவுபடுத்துவது குறித்தும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றில் குடியிருப்போர்களுக்கான நியாய வாடகை மற்றும் மூன்று ஆண்டுகளுக்கொருமுறை பொதுவாகச் செய்யப்படும் வாடகை உயர்வு ஆகியவற்றைச் சீரமைப்பது பற்றியும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான வயது முதிர்ந்த மற்றும் உடல் நலம் குன்றிய யானைகளை வனத்துறையிடம் ஒப்படைத்து அரசின் செலவிலேயே பராமரிப்பது பற்றியும், திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளுக்கு வழங்கப்படும் அரசு மானியத் தொகையை 75 லட்சம் ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கவும் கூட்டத்தில் விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

*****

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.